தினமணி

# இடுக்கி அணையில் உயர்நிலைக் குழு ஆய்வு: நிலநடுக்கத் தகவல் சேகரிப்பு

First Published : 24 Dec 2011 03:42:13 AM IST



இடுக்கி மாவட்டத்தில் உள்ள லோயர் பெரியாறில் ஆய்வு மேற்கொள்ளும் மத்திய நீர்வளத் துறைச் செயலாளர்கள் சி.டி. தத்தே, டி.கே. மேத்தா.

கம்பம், டிச. 23: உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் உறுப்பினர்கள் வெள்ளிக்கிழமை இடுக்கி அணை உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு நடத்தியதோடு நிலநடுக்கம் ஏற்பட்டதாகப் பதிவு செய்யப்பட்ட தகவல்களைச் சேகரித்தனர்.

பெரியாறு அணை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் ஐவர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தது. இந்தக் குழுவில் கேரள அரசின் சார்பில் ஓய்வுபெற்ற நீதிபதி கே.டி. தாமஸ், தமிழகத்தின் சார்பில் ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.ஆர். லட்சுமணன், மத்திய நீர்வளத் துறையின் செயலாளர்கள் சி.டி. தத்தே, டி.கே. மேத்தா ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

கொச்சியிலிருந்து வந்த மத்திய நீர்வளத் துறையின் செயலாளர்கள் சி.டி. தத்தே, டி.கே மேத்தா ஆகியோர் இடுக்கி மாவட்டத்தில் லோயர் பெரியாறு என்ற இடத்தில் கேரள மின் வாரியத்தில் அமைக்கப்பட்டுள்ள சீஸ்மோகிராபியில் இதுவரை பதிவாகி உள்ள நில நடுக்கம் குறித்த தகவல்களையும், சீஸ்மோகிராபி குறித்த விவரங்களையும் சேகரித்தனர். பின்னர், இடுக்கி அணை, சிறுதோனி அணையிலும் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின்போது, கேரள மின் வாரியத்தின் தலைமைப் பொறியாளர் கருப்பன் குட்டி, கேரள அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் பரமேஸ்வர நாயர், கேரள நீர்ப் பாசனத் துறையின் தலைமைப் பொறியாளர் பி.லத்திகா ஆகியோர் உடனிருந்தனர்.

**"தரமான நெல் விதைகளை விவசாயிகளே உற்பத்தி செய்தால் கூடுதல் லாபம்'**

First Published : 23 Dec 2011 12:30:14 PM IST

பட்டுக்கோட்டை, டிச. 22: தரமான நெல் விதைகளை விவசாயிகளே உற்பத்தி செய்தால், கூடுதல் லாபம் கிடைக்கும் என்றார் வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத் தலைவர் பேராசிரியர் பி. பார்த்தசாரதி.

மதுக்கூர் ஒன்றியம், நெம்மேலி ஊராட்சியில் புதன்கிழமை நடைபெற்ற நெல் உற்பத்தி குறித்த தொழில்நுட்பப் பயிற்சி முகாமைத் தொடக்கி வைத்து மேலும் அவர் பேசியது:

விவசாயிகள் ஆண்டுதோறும் நெல் விதைக்காக வேளாண் துறை அல்லது தனியார் நிறுவனங்களை எதிர்ப்பார்ப்பதை விட, வேளாண் துறையில் ஒரு முறை மட்டும் ஆதார விதைகளைப் பெற்று, தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு தாங்களே தரமான நெல் விதைகளை உற்பத்தி செய்து கொள்ளலாம்.

மேலும், மண் பரிசோதனை செய்து, உயர் தர உரங்களைப் பயன்படுத்தி, புதிய தொழில்நுட்பங்கள் மூலம் விவசாயப் பணிகளை மேற்கொண்டால், நிச்சயமாக கூடுதல் லாபம் கிடைக்கும்.

இதேபோல, உளுந்து, பயறு வகை விதை உற்பத்திக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றில் வழங்கப்படும் மானியத்தின் மூலமும் விவசாயிகள் நல்ல பயன் பெற முடியும்.

எனவே, இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி விவசாயிகள் பயறு வகைப் பயிர்களையும் சாகுபடி செய்ய முன் வர வேண்டும் என்றார் அவர்.

முகாமுக்கு, தஞ்சை வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) எஸ். ராஜ்குமார் தலைமை வகித்தார். நெம்மேலி ஊராட்சித் தலைவர் பொன். ஜகநாதன் முன்னிலை வகித்தார். மதுக்கூர் வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) தேவ. சுப்பையா வரவேற்றார்.

தஞ்சை வேளாண் துணை இயக்குநர் கோ. ராமதாஸ், வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் (மண்ணியல்) எஸ். மோகன்தாஸ், தஞ்சை வேளாண் உதவி இயக்குநர் (விதை சான்றளிப்புத் துறை) கே. பாண்டியராஜன், பேராவூரணி விதைச் சான்று அலுவலர் ஏ.

சிவக்குமார், உதவி வேளாண் அலுவலர்கள் அந்தோனிராஜ், துரைராஜ் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

நிறைவாக, நெம்மேலி ஊராட்சி துணைத் தலைவர் மெ. வீராச்சாமி நன்றி கூறினார்.

**காரைக்காலில் கல் நண்டுகள் அறுவடை**

First Published : 23 Dec 2011 03:09:51 PM IST

காரைக்கால், டிச. 22 : காரைக்காலில் வலை வேலி முறையில் வளர்க்கப்பட்ட கல்நண்டுகள் அறுவடை செய்யும் பணி வியாழக்கிழமை தொடங்கியது.

÷மத்திய அரசின் நிறுவனமான ராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையம் காரைக்கால் மாவட்டம், கருக்களாச்சேரி அருகே பண்ணை அமைத்துள்ளது. இங்கு கொடுவா மீன், கல் நண்டு, மெத்தை நண்டு, கடல் விறால் மீன் உள்ளிட்டவை வளர்க்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் இதுதொடர்பாக மையத்தின் சார்பில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

கருக்களாச்சேரி அருகே அமைந்துள்ள பண்ணையில் வலைவேலி முறையில் குட்டையில் கல் நண்டுகள் வளர்க்கப்பட்டு வந்தன. தலா 90 கிராம் எடையில் விடப்பட்ட நண்டுகள், நல்ல வளர்ச்சியை அடைந்ததையொட்டி, அறுவடை செய்யும் பணி வியாழக்கிழமை தொடங்கியது.

÷இதுகுறித்து அந்த மையத்தின் உதவித் திட்ட மேலாளர் கணேஷ் வியாழக்கிழமை கூறியது:

÷குஞ்சுகளாக விடப்பட்ட நண்டுகள், 175 நாள்களுக்கு பிறகு அறுவடை செய்யப்படுகின்றன. 1800 சதுர மீட்டர் பரப்பளவிலான நிலத்தில் வலைவேலி அமைத்து அவை வளர்க்கப்பட்டன. வியாழக்கிழமை மட்டும் 150 கிலோ எடையில் கல் நண்டுகள் அறுவடை செய்யப்பட்டுள்ளன. அடுத்த 3 மூன்று நாள்களுக்கு இந்தப் பணி தொடரும்.

நண்டுகள் தலா 500 முதல் 700 கிராம் வரை வளர்ந்துள்ளன. குறைந்த எடையில் உள்ள நண்டுகள் சராசரியாக கிலோ ரூ. 300 விலைக்கு விற்கப்படும். 700 கிராம் எடையிலான நண்டுகள் ஒரு கிலோ ரூ. 850-க்கு விற்கப்படும். ஏறக்குறைய செலவுகள் போக ரூ. 50 ஆயிரம் வரையில் லாபம் கிடைக்கும்.

÷தமிழகத்திலுள்ள முகவர்கள் மூலம் சீனா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளுக்கு இந்த கல் நண்டுகள் அனுப்பி வைக்கப்படும். கல்நண்டு வளர்த்தால், விவசாயிகளும், முகவர்களும் நல்ல லாபத்தை அடைய முடியும் என்றார் அவர்.

**"வாழை சாகுபடியில் அடர் நடவு முறை லாபகரமானது'**

First Published : 23 Dec 2011 12:32:04 PM IST

கரூர், டிச. 22: வாழை சாகுபடியில் அடர் நடவு முறை லாபகரமானது என்று தோட்டக்கலைத் துறையினர் விவசாயிகளுக்கு விளக்கமளித்துள்ளனர்.

கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குள்பட்ட வீரக்குமாரன்பட்டி காவல்காரன் காலனியில் வாழை அடர் நடவு முறை குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை உதவி இயக்குநர் கே. ராஜேந்திரன், கரூர் தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுனர் தே. தனசேகர் ஆகியோர் முகாமில் பங்கேற்று விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

அப்போது அவர்கள் கூறியது:

இந்தியாவில் ஆந்திரா, அசாம், பிகார், குஜராத், கர்நாடகம், கேரளம், மகாராஷ்டிரம், ஒடிசா, தமிழகம், மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் அதிகப் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது.

2009-10-ம் ஆண்டில் இந்தியாவின் வாழை உற்பத்தி 26.9 மில்லியன் டன்னாகும். மேலும், உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 37 டன்னாகும்.

நம் நாட்டின் வாழை உற்பத்தி திறன், மற்ற நாடுகளை ஒப்பிடுகையில் குறைவாகவும், உற்பத்திச் செலவு அதிகமாகவும் உள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு, வாழை உற்பத்திச் செலவைக் குறைத்து, உற்பத்தித் திறனை அதிகப்படுத்த, தேசிய வாழை ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் வெளியிடப்பட்ட புதிய தொழில்நுட்பமான வாழையில் அடர் நடவு முறை முடிவினை புழுதேரியிலுள்ள வேளாண் அறிவியல் மையம் செயல்படுத்தி வருகிறது.

இதில் பல்வேறு சோதனை முயற்சிகளுக்கு பின்னர், குத்துக்கு 2 கன்றுகள் என்ற நடவு முறையில் 50 சதக் கூடுதல் கன்றுகள் நடவு செய்து, 30 சத அதிக மகசூல் கிடைத்தது.

இந்த அடர் நடவு முறை விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகும். தற்போது குளித்தலை, கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் சுமார் 70 ஏக்கரில் அடர் நடவு செய்யப்பட்டுள்ளது என்றனர்.

**மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க 50% மானியம்**

First Published : 23 Dec 2011 10:31:30 AM IST

சேலம், டிச. 22: சேலம் மாவட்டத்தில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க மீன் வளத்துறை சார்பில் 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

இது குறித்து ஆட்சியர் க. மகரபூஷணம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் கடல் சார்ந்த பகுதிகள், அணைகள், ஏரிகள் மற்றும் குளங்களில் மீன் வளத்தைப் பெருக்க மீன்வளத் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க விரும்புவோருக்கு, செலவினத்தில் 50 சதவீதத்தை மானியமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

சுமார் ரூ.10 லட்சம் மதிப்பில் ஆண்டுக்கு ஒரு கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் திறனுடைய பண்ணை அமைக்க, ரூ.5 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

பண்ணை அமைக்க நல்ல, தரமான நிலத்தடி நீர், ஆற்று பாசனப் பகுதியில் தகுதியான இடமாகவும், வெள்ள அபாயம் இல்லாத பகுதியாகவும் இருக்க வேண்டும். மேலும் சாலை வசதி, மின் வசதி கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

சுமார் 2 ஹெக்டேர் சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் அல்லது 10 ஆண்டு குத்தகை பெற்றிருப்பவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பண்ணை அமைக்க விண்ணப்பிக்கலாம். மேலும் மீன் குஞ்சு உற்பத்தி மையம் புதிதாக அமைக்கப்பட வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் உதவி இயக்குநர், உள்நாட்டு மீன் வளம், மேட்டூர் அணை என்ற அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு, உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பித்துப் பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு 04298-244045 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**முட்டை விலை ஒரே நாளில் 16 காசுகள் உயர்வு**

First Published : 23 Dec 2011 10:30:57 AM IST

நாமக்கல், டிச. 22: வடமாநிலங்களில் முட்டையின் நுகர்வு அதிகரிப்பதால், நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஒன்றின் விலை 16 காசுகள் உயர்ந்து ரூ.3.13-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டலத் தலைவர் பி.செல்வராஜ் வெளியிட்ட அறிக்கை: கொல்கத்தா, பர்வாலா, தில்லி ஆகிய பகுதிகளில் முட்டைக்கான தேவை அதிகரித்துள்ளது. மேலும், ஹைதராபாத், விஜயவாடா, ஹோஸ்பெட் ஆகிய கொள்முதல் மண்டலங்களில் முட்டையின் விலை உயர்ந்துள்ளது. இந்நிலையில் நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் முட்டை விலை நிர்ணய ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. ஒருங்கிணைப்புக் குழு மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வியாபாரிகளும், பண்ணையாளர்களும் பங்கேற்றனர். வடமாநிலங்களில் முட்டையின் தேவை அதிகரித்து இருப்பதால் முட்டையின் விலையை


உயர்த்துவது என முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, முட்டை ஒன்றின் விலை 16 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.13-ஆக நிர்ணயிக்கப்பட்டது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**உணவுப் பொருள் பணவீக்கம் 1.81 சதவீதமாக குறைந்தது**

டிசம்பர் 23,2011,01:57




புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், டிச., 10ம் தேதியுடன் நிறை வடைந்த வாரத்தில், 1.81 சதவீதமாக குறைந்தது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில், 4.35 சதவீதமாக அதிகரித்திருந்தது என, மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008ம் ஆண்டு, பிப்., 9ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவுப் பொருள் பணவீக்கம், 2.26 சதவீதமாக குறைந்திருந்தது. அதற்கு பிறகு, தற்போதுதான் இந்த அளவிற்கு குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், கடந்த 2010ம் ஆண்டின் இதே வாரத்தில், உணவுப் பொருள் பணவீக்கம், 13.22 சதவீதம் என்றளவில் மிகவும் உயர்ந்திருந்தது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், வெங்காயம் விலை, 49.38 சதவீதம் குறைந்துள்ளது. இது தவிர, உருளைக் கிழங்கு (34.39 சதவீதம்), கோதுமை (4.21 சதவீதம்)ஆகியவற்றின் விலையும் குறைந்திருந்தது. ஒட்டுமொத்த காய்கறிகள் விலை, 26.37

சதவீதம் குறைந்து காணப்பட்டது.அதேசமயம்,ஆண்டு கணக்கின் அடிப்படையில், பெரும்பாலான உணவு பொருட்களின் விலை அதிகரித்து காணப்பட்டது. குறிப்பாக,பருப்பு வகைகளின் விலை, 14.22 சதவீதம் அதிகரித்துள்ளது. பால்(11.19சதவீதம்) முட்டை, இறைச்சி, மீன் (9.25 சதவீதம்) ஆகியவற்றின் விலை யும் உயர்ந்திருந்தது.

இது தவிர, பழங்கள் விலை,8.89 சதவீதமும், உணவு தானியங்கள் விலை,1.68 சத வீதமும் உயர்ந்திருந்தது.டிச.,10ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில்,முக்கிய பொருட்களுக்கான பணவீக்கம், 3.78 சதவீதம் என்ற அளவில் உள்ளது. இது,இதற்கு முந்தைய வாரத்தில், 5.48 சதவீதமாக அதிகரித்து காணப்பட்டது.மொத்த விலைக் குறி யீட்டு எண் கணக்கிடுவதில், முக்கிய பொருட்களின் பங்களிப்பு,20 சதவீதம் என்றளவில் உள்ளது.

எரிபொருள் பணவீக்கம், எவ்வித மாற்றமும் இன்றி, 15.24 சதவீதம் என்றளவிலேயே இருந்தது. நடப்பு 2011ம் ஆண்டின் பல வாரங்களில், நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், இரட்டை இலக்கத்திலேயே இருந்தது.

இருப்பினும், நாட்டின் பல மாநிலங்களில், வேளாண் சாகுபடி சிறப்பாக இருந்ததை அடுத்து தானிய உற்பத்தி உயர்ந்துள்ளது. இதனால், உணவுப் பொருள் பணவீக்கம் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.பொதுவாக குளிர்காலத்தில்விளை பொருள்களின், விலை குறைவாகவே இருக்கும்.நாட்டின் உணவுப் பொருள் பண வீக்கம் குறைந்துள்ளதையடுத்து, பொதுப் பணவீக்கம் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**பருத்தி ஏலம் ஒத்திவைப்பு விவசாயிகள் கடும் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 24,2011,01:57 IST

கருத்தை பதிவு செய்ய

இடைப்பாடி: கொங்கணாபுரத்தில் உள்ள கூட்டுறவு விற்பனை சங்க சேவை மையத்தில் நடக்க இருந்த பருத்தி ஏலம் திடீரென ஒத்தி வைக்கப்பட்டதால், விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை, கொங்கணாபுரத்தில் உள்ளது. இங்கு, சனிக்கிழமைதோறும் பருத்தி ஏலம் நடக்கும். இந்த ஏலத்தில், பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள், தங்கள் விளைவித்த பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வருவர். இந்நிலையில், பருத்தி ஏலம், இந்த வாரம் திடீரென ஒத்தி வைக்கப்பட்டதாக கூட்டுறவு சங்க பணியாளர்கள் தகவல் பலகையில் எழுதி வைத்துள்ளனர்.

அதனால், வெளியூரில் இருந்த வந்த பருத்தி மூட்டைகளை, ஏல களத்தில் வைத்துக் கொள்ள அனுமதி வழங்கவில்லை.
தகவல் தெரியாத விவசாயிகள், லாரிகள் மூலம் வழக்கம் போல் பருத்தி மூட்டைகளை ஏற்றி வந்தனர். ஏலம் இல்லாததாலும், பருத்தி மூட்டைகளை உள்ளே வைத்துக் கொள்ள அனுமதி கொடுக்காததாலும், விவசாயிகள் அவதிக்குள்ளாகினர். இதுகுறித்து கூட்டுறவு பணியாளர் ஒருவர் கூறியதாவது: இங்கு ஏலத்துக்கு வரும் வியாபாரிகளிடம், குறிப்பிட்ட தொகையை டிபாஸிட்டாக பெற்று ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிப்போம். பருத்தியை ஏலம் எடுப்பவர்கள், பருத்தியை குடோனில் இருப்பு வைத்து செல்வர். வியாபாரிகள், பருத்திக்கு உண்டான பணத்தை கட்டி விட்டு பருத்தியை எடுத்துச் செல்வர். இதற்கு கால அவகாசம் எதுவும் இல்லை. அதன்படி, கடந்த ஆண்டு ஏலம் எடுத்த பருத்தி, இன்னும் எங்கள் குடோனிலேயே, 15 கோடி ரூபாய் அளவுக்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனை எடுத்துச் செல்ல, விலையை குறைத்து எங்களுக்கு வழங்க வேண்டும் என, திடீரென வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது, ஏற்க முடியாத நடைமுறை. எனினும், வியாபாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். பேச்சுவார்த்தை முடிந்த பின், பருத்தி ஏலம் நடக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க 50 சதவீதம் மானியம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 24,2011,01:57 IST

கருத்தை பதிவு செய்ய
சேலம்: சேலம் மாவட்ட கலெக்டர் மகரபூஷணம் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தில், கடல் சார்ந்த பகுதிகள், ஏரிகள், குளங்கள், பண்ணைகள் ஆகிய இடங்களில் பல்வேறு திட்டங்கள் மூலம் மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டு, மீன் வளத்தை பெருக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2011 - 12ம் ஆண்டுக்கு, சேலம் மாவட்டத்தில் மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்கப்படும் செலவினத்தில், 50 சதவீதம் மானியமாக வழங்கும் திட்டத்தை, அரசு செயல்படுத்தி உள்ளது. 10 லட்சம் ரூபாய் மதிப்பில், ஆண்டுக்கு ஒரு கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யக்கூடிய மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க, ஐந்து லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.பண்ணை அமைக்க, நல்ல தரமான நில நீர் அல்லது ஆற்று பாசனப்பகுதியில் தகுதியான இடமாகவும், வெள்ள அபாயம் இல்லாத பகுதியாகவும் இருக்க வேண்டும். சாலை வசதி, மீன் வசதி கொண்டதாகவும் இருக்க வேண்டும். இரண்டு ஏக்கர் சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் அல்லது, 10 ஆண்டு குத்தகை பெற்றிருப்பவர்கள், இத்திட்டத்தின் மூலம் பண்ணை அமைக்க விண்ணப்பிக்கலாம். மீன் குஞ்சு உற்பத்தி மையம் புதியதாக அமைக்கப்பட வேண்டும். எனவே, மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை

அமைக்க விரும்புபவர்கள், "உதவி இயக்குனர், உள்நாட்டு மீன்வளம், மேட்டூர் அணை' என்ற அலுவலகத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம். மேலும் விபரங்களுக்கு, 04298 - 244045 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் பெறலாம்.

**அறுவடை சமயம் துவங்கிய அணை விவகாரம் அதிர்ஷ்டவசமாக தப்பிய தக்காளி விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 24,2011,01:57 IST

கருத்தை பதிவு செய்ய

மேட்டூர் : அறுவடை நேரம் விஸ்வரூபம் எடுத்த அணை விவகாரத்தால், கேரளாவுக்கு தக்காளி அனுப்ப இயலாத நிலையில், சாகுபடி பரப்பு குறைந்ததால் நடப்பாண்டு நஷ்டத்தில் இருந்து மேச்சேரி தக்காளி விவசாயிகள் அதிர்ஷ்டவசமாக தப்பினர். சேலம் மாவட்டம், மேச்சேரி வட்டாரத்தில் ஆண்டுதோறும் இறவை, மானாவரியாக, 6, 800 ஏக்கர் நிலப்பரப்பில் பி.கே.எம்.1, ருச்சி, யு.எஸ்.,618, யு.எஸ்.,1196 உள்ளிட்ட தக்காளி ரகம் சாகுபடி செய்து, ஆண்டுக்கு 29 ஆயிரத்து, 804 மெட்ரிக் டன் தக்காளி உற்பத்தி செய்யப்படும். மேச்சேரியில் இருந்து தமிழகத்தின் பிற மாவட்டங்கள் மட்டுமின்றி, கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்ற வெளிமாநிலங்களுக்கும் தக்காளி விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படும். நடப்பாண்டு மேச்சேரி விவசாயிகள் மஞ்சள், வாழை என இதர பயிர் சாகுபடிக்கு மாறியதால் இறவை, மானாவாரியில் 3 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே தக்காளி சாகுபடி செய்யப்பட்டது. தற்போது மேச்சேரியில் தக்காளி அறுவடை நடக்கிறது. விவசாயிகள் சாகுபடி பரப்பை குறைத்ததால் நடப்பாண்டு, 15 ஆயிரம் மெட்ரிக் டன் தக்காளி மட்டுமே அறுவடையாகும். கடந்த முறை சந்தைக்கு வரத்து அதிகரித்ததால் தக்காளி விலை வீழ்ச்சியடைந்தது. குறைந்த பட்சம் கிலோ, 2 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. நடப்பாண்டு சாகுபடி பரப்பு குறைந்ததால் தக்காளி விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. தக்காளி அறுவடை துவங்கிய சமயம் முல்லை பெரியாறு அணை விவகாரம் விஸ்வரூபம் எடுத்ததால், மேச்சேரி தக்காளியை, கேரளாவுக்கு விற்பனைக்கு அனுப்ப முடியவில்லை. தமிழகத்திலேயே தக்காளியை விற்க வேண்டிய நிலை நீடிப்பதால், நேற்று மேச்சேரி சந்தையில், 12 கிலோ எடை கொண்ட ஒரு கூடை தக்காளி, 40 ரூபாய்க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். வாடிக்கையாளர்களுக்கு தக்காளி கிலோ, 5 முதல், 7 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தக்காளி வியாபாரிகள் கூறியதாவது: சீஸன் சமயத்தில் தக்காளி கிலோ, 3.50 ரூபாய்க்கு கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்கு குறைந்த லாபமே கிடைக்கிறது. நடப்பாண்டு தக்காளி சாகுபடி பரப்பு பாதியாக குறைந்த நிலையில், கேரளாவுக்கு

அனுப்பியிருந்தால் தக்காளி விலை அதிகரித்திருக்கும். கேரளாவுக்கு அனுப்ப முடியாததால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும் வழக்கம்போல நடப்பாண்டு மேச்சேரி வட்டாரத்தில், 6,800 ஏக்கரில் சாகுபடி செய்து, கேரளாவுக்கு அனுப்ப இயலாத சூழ்நிலையால், தக்காளி விலை கடுமையாக வீழ்ச்சியடைந்திருக்கும். அதிர்ஷ்டவசமாக மேச்சேரி தக்காளி வியாபாரிகள் நஷ்டத்தை தவிர்த்து விட்டனர்.இவ்வாறு அவர் கூறினார்.

**செங்கரும்பில் இடைக்கனு புழு தாக்குதல் அதிகரிப்பு : நடவு செய்த விவசாயிகள் விரக்தி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 24,2011,01:57 IST

கருத்தை பதிவு செய்ய

பனமரத்துப்பட்டி : பனமரத்துப்பட்டி பகுதியில், இடைக்கனு புழு தாக்குதல் அதிகரித்துள்ளதால், செங்கரும்பு நடவு செய்த விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். சேலம், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், கடந்த காலங்களில் 50க்கும் மேற்பட்ட ஏக்கரில் செங்கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. சாகுபடி செலவு அதிகரிப்பு,நோய் தாக்குதல், மானிய உதவிகள் கிடைக்காமை ஆகிய காரணங்களால், நடப்பாண்டில், செங்கரும்பு சாகுபடி பரப்பு, 10 ஏக்கருக்கும் கீழ் குறைந்துள்ளது. குறைந்த பரப்பில் நடவு செய்யப்பட்ட கரும்பிலும் இடைகனு புழு நோய் தாக்கி, விளைச்சல் பாதிக்கப்பட்டதால், விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர். நாழிக்கல்பட்டி விவசாயி பெருமாள் கூறியதாவது: ஆண்டுதோறும் சித்திரை மாதம் செங்கரும்பு நடவு செய்து, மார்கழி மாதம் முதல் அறுவடை செய்யப்படும். விதை கரும்பு, களை பறித்தல், உரம், மருந்து என, ஏக்கருக்கு, 30 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். நடவு செய்த, ஒன்பது மாதத்தில் குறைந்தபட்சம் ஆறு அடி உயரத்திற்கு கரும்பு வளர்ச்சி இருக்கும். தற்போது, இடை கனு புழு தாக்கியதால், நான்கு அடி உயரம் மட்டுமே கரும்பு வளர்ந்துள்ளது. அடிபகுதியில் குண்டாக இருக்கும் கரும்பு மேல் பகுதி சிறிதாகி, குருத்து உடைந்து விடுகிறது. நோய் தாக்கியதால், ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை மருந்து, உரம் என, செலவு அதிகரித்துள்ளது. செங்கரும்பு நடவு செய்த விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. செங்கரும்பு நடவு செய்யும் விவசாயிகளுக்கு, அரசு மானிய உதவிகள் ஏதும் வழங்குவதில்லை. அதனால், செங்கரும்பு பயிர் செய்வதை கைவிட்டு, ஆலை கரும்பு நடவு செய்ய உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார். பனமரத்துப்பட்டி வட்டார வேளாண் உதவி இயக்குனர் மணிக்குமார் கூறியதாவது: செங்கரும்பு சோகை தவறாமல் உரித்து வந்தால், நோய் தாக்குதல் குறையும். சத்து குறைவு காரணமாக, கரும்பு போதிய வளர்ச்சி இன்றி இருக்கும். இடைகனு புழு தாக்கிய வயலில், டிரைக்கோ கிரம்மா என்ற ஓட்டுண்ணியை விட வேண்டும். இந்த ஒட்டுண்ணி, கரும்பில் இருக்கும் புழுவை சாப்பிடுவதால், நோய் கட்டுப்படுத்தப்படும்.

ஒரு இடை கனு புழு, 300 பூச்சிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாகும். பூச்சிகளை தடுக்க, கரும்பு வயலில் இனக்கவர்ச்சி பொறி அமைக்கலாம். வயலில் தொடர்ந்து ஒரே வகை பயிர்கள் பயிரிடாமல், சுழற்சி முறையில் மாற்று பயிர் பயிரிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**"இயற்கை வேளாண்மை குறித்து கல்லூரிகளில் பாடத்திட்டம்'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 24,2011,02:01 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி தொழில்வர்த்தக சபை சார்பில், "ஜீரோ பட்ஜெட்' இயற்கை வேளாண் கருத்தரங்கு நிறைவு நாள் நிகழ்ச்சி நேற்று நடந்தது.
பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரி தலைவர் கிருஷ்ணராஜ் வாணவராயர் துவக்கி வைத்து பேசியதாவது: நமது நாட்டில், முதல் பசுமை புரட்சியை சி. சுப்பிரமணியம் கொண்டு வந்தார்; அவர், பொள்ளாச்சியை சேர்ந்தவர். தற்போது, இயற்கை வேளாண் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மகாராஷ்டிர மாநிலத்தை சேர்ந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி மூலம் பொள்ளாச்சியில் கருத்தரங்கு நடக்கிறது.
இயற்கை வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். இயற்கை வேளாண்மையை வலியுறுத்தும் வகையில் கல்லூரிகளில் பாடத்திட்டம் வகுக்க வேண்டும்.இவ்வாறு, கிருஷ்ணராஜ் வாணவராயர் பேசினார். தொடர்ந்து, மத்திய அரசு வெளியிட்ட சி.சுப்பிரமணியம் உருவம் பதித்த நாணயத்தை இயற்கை வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பலேக்கருக்கு பரிசளித்தார்.

**தென்னை விவசாயிகளுக்கு தோட்டகலைத்துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 24,2011,02:01 IST

கருத்தை பதிவு செய்ய
கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதி தென்னந்தோப்புகளில் " கோகோ' சாகுபடி செய்தால், தென்னை விளைச்சல் அதிகரிக்கிறது என தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்துள்ளனர்.
கோவை மாவட்டத்தில் " கோகோ' பயிரிடுவதற்கான தட்பவெப்ப நிலை, மண் வளம் மற்றும் நீர்வளம் ஏற்றதாக உள்ளது. தென்னையில் " கோகோ' ஊடுபயிராக பயிரிடுவதன் மூலம், தென்னை விளைச்சல் அதிகரிக்கிறது. ஆண்டுக்கு 800 கிலோ இலைகள் உதிர்வதால், மண்ணில் அங்கக சத்து உயர்கிறது. சிறந்த முறையில் களை கட்டுப்பாடு செய்யப்படுகிறது. மண் அரிமானமும், மண்ணின் ஈரப்பதமும் காக்கப்படுகிறது.

ஒரு ஏக்கரில் "கோகோ' பயிரிடுவதற்கு 200 முதல் 220 நாற்றுகள் தேவைப்படும். நல்ல முறையில் பராமரிப்பு செய்தால், ஆண்டுக்கு மரம் ஒன்றில் இருந்து இரண்டு கிலோ உலர் விதைகள் கிடைக்கும். ஆண்டு விளைச்சல் 400 கிலோ உயர்வதோடு, ஆண்டு வருமானம் 28 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும். இதில் செலவு போக நிகர லாபம் 20 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு கிடைக்கும். இத்தகவலை கிணத்துக்கடவு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் முகமது இக்பால் தெரிவித்துள்ளார்.

**மீன் வளர்ப்பு பண்ணை அமைக்க ரூ.5 லட்சம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 24,2011,01:38 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மீன் வளத்துறை மூலம், மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க, 50 சதவீதம் (ஐந்து லட்சம் ரூபாய்) மானியம் வழங்கப்படுகிறது. பத்து லட்சம் ரூபாய் மதிப்பில், ஆண்டுக்கு ஒரு கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யக்கூடிய, மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க உள்ள இடம், அதற்கு தகுதியானதாகவும், வெள்ள அபாயம் உள்ள பகுதிக்கு வெளியேயும் இருக்க வேண்டும். நல்ல தரமான நில நீர் அல்லது ஆற்றுப்பாசன பகுதியில் மின் வசதி, சாலை வசதி கொண்டதாக இருக்க வேண்டும். மீன் குஞ்சு உற்பத்தி மையம் புதிதாக அமைக்க இரண்டு ஹெக்டேர் சொந்த நிலம் அல்லது பத்து ஆண்டு குத்தகை பெற்றிருக்க வேண்டும். அதிக விவசாயிகள் விண்ணப்பம் செய்தால், தகுதி அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். "மீன் வள உதவி இயக்குநர், உள்நாட்டு மீன் வளம், 4-எஸ்.வி.காம்ப்ளக்ஸ், வீரப்பம்பாளையம் பிரிவு, பெருந்துறை ரோடு, திண்டல் அஞ்சல், ஈரோடு - 12,' என்ற முகவரியில் அணுகி, விண்ணப்பம் பெற்று, உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

---